<u>சுருக்கம்</u>

சமூக நலம் – ஊனமுற்றோர் நலம் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்கல்வி நிலையங்களில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.4) துறை

அரசாணை (நிலை) எண். 135 நாள் 20.9.2008

திருவள்ளுவர் ஆண்டு 2039

ஆவணி திங்கள் 4–ம் நாள்

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.8.2008 அன்று ஊனமுற்றோருக்கு அளிக்கப்பட்ட புதிய சலுகைகள் பற்றிய செய்தி குறிப்பு
2. அரசாணை நிலை எண் 389, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 4.12.2007
3. அரசாணை நிலை எண் 259, உயர்கல்வி (பி2) துறை, நாள் 26.6.2008
4. முதன்மைச் செயலாளர்/ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கடித எண்.8239/ஊ.ம.3/2008, நாள் 21.8.2008.

----

**<u>ஆணை:</u>**

தமிழ்நாடு உடல் ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 19.8.2008 அன்று சந்தித்து தங்களது கோரிக்கைகளை அளித்தார்கள். அப்போது ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்பின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து பெரும்பாலான கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அரசாணைகள் வெளியிடப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வறிவுப்புகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக் கழகத்தில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும் என்பது ஒன்றாகும். மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினைத் தொடர்ந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக் கழகத்தில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளித்து ஆணை வெளியிடுமாறு முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த பின்னர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர் கல்வி நிலையங்களான மருத்துவக் கல்லூரிகள் மற்றும் வேளாண்மை கல்லூரிகளில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

3. அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச கல்வி அளிக்கும் திட்டத்தினை அமுல்படுத்தி மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அரசு பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் (Government Polytechnic Colleges) மற்றும் சிறப்புப் பயிலகங்களில் (Special Institutions) பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் (Tuition fees) செலுத்துவதிலிருந்து விலக்களித்து மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையிலும் ஏற்கனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. பொறியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் திறந்த நிலைப் பல்கலைக்கழகங்களில் பயிலும் ஊனமுற்றோருக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்களிக்க உயர் கல்வித் துறையிலும், மேலும் மீன்வளக் கல்லூரி, மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் ஊனமுற்றோர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்களிக்க கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையிலும் தனியே அரசாணை வெளியிடப்படும்.

5. இவ்வாணை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண்மைத் துறைகளின் இசைவுடன் முறையே அ.சா. எண் 9/ மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத்துறை, (செயலாளர்), நாள் 1.9.2008 மற்றும் 32196/AU/2008–1, நாள் 10.9.2008.ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை–6
செயலாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9
செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9
மாநில கணக்காயர் , சென்னை –9/18/35
மாநில கணக்காயர் , சென்னை –91/8/35 (பெயரில்)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள்
(ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் மூலமாக)
செயலர் , பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, சென்னை –9
செயலர், நிதித்துறை, சென்னை –9
உறுப்பினர் – செயலர், தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், கல்லூரிச் சாலை, சென்னை –6
செயலாளர், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, சென்னை –9
செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை –9
இயக்குநர், மருத்துவ கல்வி இயக்ககம், சென்னை–10
இயக்குநர், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை –6
ஆணையர், வேளாண்மைத்துறை, சேப்பாக்கம், சென்னை –5
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் –3
<u>நகல்</u>
அமைச்சர் (சமூக நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9
நிதித் (சந) துறை, சென்னை–9

சமூக நலத் (ச.ந.2) துறை, சென்னை –9
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், சென்னை –9
இருப்புக்கோப்பு / உதிரி நகல்//

ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்